டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த நிதி ஆண்டில் இல்லாமல் இருந்தாலும் - அடுத்த நிதி யாண்டிலாவது தொடங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தஞ்சை மாவட்டத்தில் ஒரு நூற்பாலை மணல்மேட்டில் இருக்கிறது. அது தவிர தமிழகத்தில் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. அதன் வாயிலாக ஒத்தி செய்யப்படுகிற சிட்டா நூலும், கோன் நூலும், உபரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. கோ-ஆப்டெக்சுக்கு தருவது போக, மீதமுள்ளவற்றை தனியாருக்கு நாம் விற்றுக்கொண்டு இருக்கிறோம். இப்போது நாம் உபரி மாநிலமாக இருக்கிறோம். ஆதலால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 169, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

169—

தமராக்கி - கொத்தங்குளம் சாலையில் ஆற்றுப் பாலம் கட்டும் பணி

*10886 திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, தமராக்கி - கொத்தங்குளம் சாலையில் மதுரை மாவட்டம் பகுதியை இணைக்கும் ஆற்றுப் பாலம் கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

1993 மார்ச் 30]

திரு. கே. ஆர். முருகானந்தம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதியில் தமராக்கி-கொத்தங்குளம் சாலையில் ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றுப் பாலத்தை இணைக்கின்ற பணியைச் செய்தால், மதுரை மாவட்டப் பகுதியையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தையும் சேர்த்து போக்குவரத்து ஏற்படும். அந்தப் பகுதியிலே உள்ள பல்வேறு கிராமங்களில் வாழ்கின்ற கிராம மக்கள் மதுரைக்குப் போய் வருவதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சாலைகளிலே போக்குவரத்துக்களை எல்லாம் அதிகமாக செய்து பாலங்களைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். தற்போது ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் அமைக்க இருக்கின்ற திட்டத்தின் கீழ் சிவகங்கை தொகுதியில் அமைக்க இருக்கும் பாலத்திற்கு மாற்றாக, இந்தப் பாலத்தை எடுத்துக்கொண்டு, இந்த நிதி ஆண்டில், அதைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தினுடைய மதிப்பீடு ஏறத்தாழ 55 லட்சம் ரூபாய். அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு பகுதி 2 திட்டத்திலும் மற்ற திட்டங்களிலும் சேர்க்கவில்லை. ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற அளவிற்குப் போடுகிறபோது, தொகை இந்த அளவுக்கு வராது. அவைகள் பற்றி மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்கின்ற நேரத்திலே தெரிவிக்கப்படும். ஆகவே, இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்கின்ற வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரி அவர்களே, அவ்வளவு பெரிய அளவிலே பாலம் அமைக்காவிட்டாலும் கூட, ஒரு ஓடுபாலமாவது அந்தப் பகுதியிலே மக்கள் போய் வருவதற்கு வாய்ப்பாக, குறைந்த செலவிலே, அமைத்துக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காஸ்-வே பற்றிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைத் தமிழிலே ஓடுபாலம் என்று சொல்வார்கள். தரை மட்டப் பாலம் என்றும் சொல்லலாம். ஆகவே, உயர்மட்டப் பாலத்திற்கு மதிப்பீடு போட்டு இருக்கிறார்கள். இந்தத் தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு, காஸ்-வே கட்டுவதற்கு கட்டுமானச் செலவு குறைவாகத்தான் இருக்கும். ஏற்கெனவே, நானே அந்த இடத்

திற்குச் சென்று பார்த்து இருக்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இது சம்பந்தமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தரை மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 170, திரு. டி. வேலையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

170—

நகரங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் ஆகியவைகளை வடிவமைக்கும்போது பாதசாரிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்

*11590—திரு. டி. வேலையா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் போன்றவைகளை வடிவமைக்கும்பொழுது, பாதசாரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனி இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர சாலைகள் வடிவமைக்கின்ற போதெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ள குறியீடுகளின்படி பாதசாரிகளுக்கு வசதியாக தனி இடம் ஒதுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-25

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இப்போது எல்லா இடங்களிலும் குறிப்பாக நகரங்களில் வாகனப் போக்குவரத்து பெருகி வருவதாலும், புதிய சாலைகள் போடுவதாலும், பழைய சாலைகளை மேம்பாடு செய்வதாலும், பல பல கட்டிடங்கள் கட்டப்படுவதாலும் நடந்து செல்லும் மக்களுக்கு ஆபத்தும், அசௌகர்யமும் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு புதிய சாலைகளை அமைக்கும்பொழுது, பழைய சாலைகளை மேம்பாடு செய்யும்போது வரைபடம் மற்றும் மதிப்பீடுகளைச் செய்யும்போது நடைபாதைக்குச் சில வழிவகை செய்தால், பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். இதில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றிற்கு பொறுப்பு இருக்கிறது. எனவே வருகின்ற காலத்தில் இதை அதிக கவனத்தில் கொண்டு, அரசு செயல்படுமா என்பதை தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.